# பத்மனாபபுரம் நகராட்சி

_பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2020–ம் வருடம் ஏப்ரல் மாதம் 28–ம் தேதி காலை 11.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## பொருட்கள்

1)இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறையின்படி 59 துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகர் மன்ற தீர்மானம் எண்.1405, நாள் 15/02/2019-ன் படி Southern Solid Waste Management Service, Mulagumoodu நிறுவனத்திற்கு ந.க.எண்.2047/2018/இ1, நாள் 23/04/2019 -ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணி உத்தரவின்படி 22/04/2019 தியதியுடன் மேற்படி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட ஓராண்டு காலம் முடிவு பெறுவதால் அடுத்த ஓராண்டு காலத்திற்கு பொது சுகாதார பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினசரி ஊதியம் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டும்.

ஏற்கனவே Southern Solid Waste Management Service, Mulagumoodu நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்ட கோப்பில் (Draft Agreement) வரிசை எண். 9-ல் அவசர காலங்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட அதே நிறுவனத்திற்கு அதே ஊதியத்தில் மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டித்து வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கொரோனா வைரஸ் நோய் தொற்று (COVID-19) தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் அரசின் 144 தடை உத்தரவு காரணமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு பணிகள் மேற்கொள்ள இயலாத சூழ்நிலையால் ஏற்கெனவே பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ள Southern Solid Waste Management Service, Mulagumoodu நிறுவனத்திற்கு பொது சுகாதாரப் பணிகளின் அத்தியாவசியம் கருதி ஒரு மாத காலத்திற்கு தற்போது வழங்கப்பட்டு வரும் அதே ஊதிய நிர்ணய அடிப்படையில் ஒப்பந்த அனுபவத்தை நீட்டித்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு:- COVID-19 தடுப்பு நடவடிக்கை மற்றும் அரசின் 144 தடை உத்தரவு ஆகியவற்றின் காரணமாக பொது சுகாதார நலனைக் கருத்திற் கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் .2047/2018/அ2

<u>**மன்றத் தீர்மானம் எண். 1623, நாள் 28.04.2020.**</u>

**ஒரு மாத காலத்திற்கு மட்டும் 2019–2020 ஆம் நிதியாண்டின் அங்கீகரிக்கப்பட்ட நிரக்கில் ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

2)இந்நகராட்சிக்குச் சொந்தமான தக்கலை பேட்டை சந்தையில் சேகரமாகும் வாழைத்தார் தண்டுகள், கரி இலைக்கழிவுகள் ஆகியவற்றை MCC செயல்பாடு Pyroloysis கட்டமைப்பு FSTP கட்டமைப்பு ABC பணிகளுக்கான கட்டமைப்பு ஆகியவற்றின் காரணமாக அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்ள இயலாத காரணமாக சந்தை உட்பகுதியான கடைசி சுற்றுச் சுவர் ஒட்டிய பகுதியில் குலச்சந்தை கழிவுகளை ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. மேலும் கொரோனா (Covid-19) வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கையின் பொருட்டு சந்தை பகுதியில் சமூக இடைவெளியினை கடைபிடிக்க வேண்டி அத்தியாவசியம் கருதியும், போதிய இடவசதி தேவையினைக் கருத்தினைக் கொண்டும், சந்தை நடவடிக்கைகளை மேற்கொள்ள அவசர அவசியம் கருதியும், சார் ஆட்சியர் கருத்துரையின் படியும்

1)மருந்துக்கோட்டை உரக்கிடங்கு பகுதியினுள் ஏற்கனவே கொட்டப்பட்டுள்ள (Legancy Waste) கழிவுகளை Hitachi Chain Dozes வாகனம் மூலம் தோராயமாக சுமார் 35 முதல் 40 மணி நேரம் சீரமைப்பு செய்வதற்கு அனுமதிக்கும்.

2)மேலும் சந்தைக்குள் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள குலச் சந்தைக் கழிவுகளை JCP வாகனம் மூலம் உத்தேசமாக (15 முதல் 20 மணி நேரம்) 4 எண்ணிக்கைக்கு குறையாமல் டிப்பர் லாரிகளில் ஏற்றி (தோராயமாக 100 முதல் 110 லோடு) நகராட்சி மருந்துக் கோட்டை உரக்கிடங்கு பகுதியில் கொட்டி அப்புறப்படுத்தவும் அனுமதிக்கும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.1,45,000/- (One Lakhs Forty five thousand only) அனுமதிக்கும். அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலன் கருதியும் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு;- உத்தேச செலவீனத்திற்கும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். அ2/246/2020)

**மன்றத் தீர்மானம் எண்.1624 நாள் 28.04.2020**

**அனுமதிக்கப்படுகிறது.**

3)இந்நகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள அத்யாவசிய உபகரணங்கள் கிருமிநாசினிகள் மற்றும் கொரோனா சம்மந்தப்பட்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவகளின் அலுவலக ந.க.எண். 3336/ஜெ2/2020-4 நாள் 23/03/2020 (ம) ந.க.எண். 3336/ஜெ2/2020-13 நாள் 09/04/2020-ன் படி ரூ.3,00,000/- மற்றும் 13,00,000/- ஆக மொத்தம் ரூ. 16,00,000/- வரப்பெற்றுள்ளது.

கொரோனா தடுப்பு பணிகள் மேற்கொள்ள கடந்த 17/03/2020-ம் தேதியில்ரூ. 2,00,000/- மற்றும் 24/03/2020-ம் தேதியில் ரூ. 5,00,000/- ஆக மொத்தம் ரூ. 7,00,000/-க்கு நகர் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. (ந.ம.தீ. எண். 1612 (ம) 1615)

தற்சமயம் ஏற்கனவே நகர் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ள தொகையினை விட அதிகமாக செலவுகள் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட தொகை ரூ. 16,00,000/- இலட்சத்தினை கொரோனா தடுப்பிற்குரிய தலைப்பின் கீழ் செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 246/2020/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1625, நாள் 28.04.2020</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

4)இந்நகராட்சி பொது சுகாதார வாகனம் எண். TN75B 4577(TATA ACE) வாகனத்துக்கு மராமத்து பணிகள் மேற்கொள்ள 17/04/2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | A.R.K. ஆட்டோ மொபைல்ஸ் நாகர்கோவில் | **37,642/-** |
| 2. | K.S.S.S. ஆட்டோமொபைல்ஸ் நாகர்கோவில் | **39,058/-** |

வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1-ல் உள்ள A.R.K. ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த A.R.K. ஆட்டோ மொபைல்ஸ் நாகர்கோவில் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கியதற்க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி அளித்த A.R.K. ஆட்டோ மொபைல்ஸ், நாகர்கோவில் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். அ2/1416/2017)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1626, நாள் 28.04.2020</u>**

**குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரித்து அவசரம் கருதி வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வழங்கப்படுகிறது.**

5) பத்மனாப்புரம் நகராட்சிக்குட்பட்ட மருந்துக் கோட்டை உரக்கிடங்கு பகுதியில் குப்பைகள் அதிகமாக சேகரமாகி உள்ளது. மேற்கண்ட உரக்கிடங்கு பகுதியின் சுற்றுப்புற சூழலை கருத்தில் கொண்டு சேகரமாகி உள்ள குப்பைகளை Bio Mining முறையில் பிரித்தெடுத்து அகற்ற ரூ.100.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியினை தூய்மை பாரத இயக்கம் (SBM) திட்டம் 2020-2021 -ன் கீழ் இத்திட்டத்தினை செயல்படுத்திடவும், உரிய நிர்வாக அனுமதி வழங்க வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு மதிப்பீட்டுப் பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 317/2020/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1627, நாள் 28.04.2020</u>**

**கருத்துரு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது.**

6) பத்மனாபபுரம் நகராட்சியில் பொது நிதி 2020-2021 ன் கீழ் கீழ்கண்ட விபரப்படி பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ.எண். | பணியின் பெய | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1, | பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளுக்கும் குடிநீர் குழாய் மற்றும் மின் பகிர்மானக் குழாய் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | 6.00 |

மேற்கண்ட பணிக்கு 22/04/2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| **வ.எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** |
|---|---|
| 1, | திரு. பி. ஜார்ஜ் கவியநல்லூர் |
| 2, | திரு. சி. சந்திரசேகர் கருக்கன்குழி |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்ததில் கீழ்க்கண்டவாறு விலை விகிதங்கள் வழங்கியுள்ளார்கள்.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ரூ. | விலை விகிதம் கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1, | திரு. பி. ஜார்ஜ் கவியநல்லூர் | 6.00 | 550884.00. | 4.12 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |
| 2, | திரு. சி. சந்திரசேகர் கருக்கன்குழி | 6.00 | 525437.00 | 0.69 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு. |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் (-0.69 % சதவீதம் மதிப்பீட்டை விட குறைவு) வழங்கியுள்ள வ.எண். 2-ல் காணும் ஒப்பந்த்தாரர் திரு. சி. சந்திரசேகர் கருக்கன்குழி அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 293/2020/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1628, நாள் 28.04.2020</u>**

**குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

7) பத்மனாபபுரம் நகராட்சியில் பொது நிதி 2020-2001-ன் கீழ் கீழ்கண்ட விபரப்படி பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பிடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1, | பத்மனாபபுரம் நகராட்சி அலுவலக கணணி அறையிலுள்ள 5 KVA AARGEE UPS -க்கான பழைய பேட்டரிகளை (100AH. 12 VOLT) EXIED, PANOSONIC முதலான உயதரமுள்ள SMF (Sealed Maintenance Fresh) பேட்டரிகளை நிறுவி கணணிகளை இயக்க முழுமையான POWER BACKUP கிடைத்தல் மற்றும் UPS பழுதினை சரி செய்யும் பணிகள் மேற்கொள்ளுதல். | 1.25 |

மேற்கண்ட பணிக்கு 22/04/2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | ஒப்பந்த்தரார்/நிறுவனதாரர் பெயர் |
|---|---|
| 1, | M/s. SRIHAA POWER SYSTEM<br>33/1, Nagercoil. |
| 2. | M/s. S.R. Electronics<br>1-67E, Christu Nager Road,<br>Vettornimadam, Nagercoil |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்ததில் கீழ்க்கண்டவாறு விலை விகிதங்கள் வழங்கியுள்ளார்கள்.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர்/ நிறுவனதாரர்பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கோரியதொகை ரூ. | விலை விகிதட்ம கூடுதல்./ குறைவு |
|---|---|---|---|---|
| 1, | M/s. SRIHAA POWER SYSTEM<br>33/1, Nagercoil. | 1.25 | 122300.00 | 14.09%சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம். |
| 2, | M/s. S.R. Electronics<br>Nagercoil | 1.25 | 107200.00 | மதிப்பீடு விலை விகிதம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு விலைவிகிதம் வழங்கியுள்ள வ.எண்.1-ல் காணும் நிறுவனதாரர் M/s. S.R. Electronics, Nagercoil அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1647/2019/இ1)

**மன்றத் தீர்மானம்  எண்.1629, நாள் 28.04.2020**

**குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. S.R._Electronics நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டது.**

8)இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள ஜென்செட் மின் தடை ஏற்படும் பட்சத்தில் அலுவலக உபயோக பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது பழுது ஏற்பட்டு இயங்க முடியாத நிலையில் உள்ளது. மேற்படி பத்மனாப்புரம் நகராட்சிக்குட்பட்ட சரகத்தில் அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் அலுவலகத்தில் இயல்பாக நடைபெற்று வரும் பணிகள் பாதிப்படைகிறது. மேலும் தற்போது (COVID -19)கொரோனா தொற்று நோய் அவ்வப்போது தடுக்கும் பணிகள் மேற்கொண்டு வருவதாலும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு அறிக்கை அனுப்ப வேண்டிய சூழல் உள்ளது. ஆதலால் மேற்கண்ட பழுது ஏற்பட்ட ஜென்செட்டிக்கு பழுது நீக்கி இயக்க வேண்டிய சூழல் உள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5100/- ஆகும். மேற்கண்ட செலவினத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அவசர அவசியம் கருதி தொகை வழங்குவதற்கும் மன்ற அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 354/2020/இ1)

**மன்றத் தீர்மானம் எண்.1630, நாள் 28.04.2020**

**அனுமதிக்கப்படுகிறது.**

9) இந்நகராட்சிக்குட்பட்ட தக்கலை பேட்டை சந்தையில் சேகரமாகும் குலை சந்தை கழிவுகளை JCB வாகனம் மூலம் அப்புறப்படுத்தவும் மேலும் மருந்துக் கோட்டை உரக்கிடங்கு பகுதியில் ஏற்கனவே கொட்டப்பட்டுள்ள (Legancy Waste) கழிவுகளை Hitachi இயந்திரம் மூலம் சீரமைப்பு செய்வதற்கு 23/04/2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்த்தாரர் பெயர் | தொகை<br>ரூ. |
|---|---|---|
| 1, | சி. ஜெகஸ்லால்<br>தக்கலை | 1)பொக்லைன் 1 மணி நேரத்திற்கு -ரூ.2050/-<br>2)JCB வாகனம் 1 மணி நேரத்திற்கு - ரூ.840/-<br>3)டிப்பர் லாறி ஒரு நடைக்கு<br>(மார்க்கெட் - உரக்கிடங்கு)<br>4 எண்ணம் குறையாமல் பெறப்பட<br>வேண்டும். - ரூ.380/- |
| 2. | பி. ஆஸ்டின் கிலாரி | 1)பொக்லைன் 1 மணி நேரத்திற்கு -ரூ.2100/-<br>2)JCB வாகனம் 1 மணி நேரத்திற்கு - ரூ.860/-<br>3)டிப்பர் லாறி ஒரு நடைக்கு<br>(மார்க்கெட் - உரக்கிடங்கு)<br>4 எண்ணம் குறையாமல் பெறப்பட |

| | | |
|---|---|---|
| | | வேண்டும். - ரூ.400/- |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 1-ல் காணும் சி. ஜெகஸ்லால் தக்கலை ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத் தொகை குறைவாக உள்ளது. எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த சி. ஜெகஸ்லால். தக்கலை ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கவும். அவசர அவசியம் கருதி தனி அலுவலர்/ ஆணையர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- குறைந்த ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஆணையர்/தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். அ2/246/2020)

**<u>மன்றத் தீர்மானம் எண்.1631, நாள் 28.04.2020</u>**

**ஒப்பந்தக்காரர் திரு. சி. ஜெகஸ்லால் வழங்கியுள்ள குறைந்த நிரக்கிலான ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

10) இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள ஜென்ரேட்டர் பழுது பணிகள் மேற்கொண்டமைக்கு கீழ்க்கண்டவாறு விலைப்பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நிறுவனதாரர் பெயர்/முகவரி | பழுதுநீக்கம் செய்யப்பட்ட வேலையின் விபரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1, | திரு. சரவணா சவுண்ட்ஸ் வீராணி ஆளூர் | சாட்டிங்காயில்(1 செட்) | 1600/- |
| 2 | | Oil (2 lits) | 480/- |
| 3 | | Labour Charges (1 No) | 1000/- |
| 4 | | Silencer(1 Sed) | 2000/- |
| | | Total | 5080/- |

மேற்கண்ட விபரப்படி நிறுவனதாரர் கொடுத்துள்ள விலைப் பட்டியலின்படி தொகை ரூ.5080/-ஐ நிறுவனதாரர் திரு. சரவணா சவுண்ட்ஸ் ஆளூர் என்பவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அவசர அவசியம் கருதி தொகையினை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3541/2020/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1632, நாள் 28.04.2020</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

11) இந்நகராட்சிக்குட்பட்ட சாரோடு பகுதியில் உள்ள மினி பவர் பம்ப் செல்கின்ற பைப்லைன் உடைந்து பழுது ஏற்பட்டுள்ளது. மேற்படி பழுது ஏற்பட்டுள்ள நிலையில்

தண்ணீர் ஏற்ற முடியாத நிலையில் உள்ளது. மேலும் தற்போது அப்பகுதி பொது மக்கள் நலன் கருதி மேற்கண்ட பைப்லைன் பழுது (1” Pipe line) பணியினை உடனடியாக செய்யவும் உத்தேச செலவினம் மதிப்பீடு ரூ.19,000/- (ரூபாய் பத்தொன்பதாயிரம் )க்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட செலவினத்தினை குடிநீர் விநியோக நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அவசர அவசியம் கருதி பிரிவு 15-ன் படி (த.நா.ந.ச) செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 275/2020/இ1)

<u>மன்றத் தீர்மானம் எண். 1633, நாள் **28.04.2020**</u>

**குடிநீர் அவசரம் கருதி அனுமதிக்கப்படுகிறது.**

12) இந்நகராட்சிக்குட்ப்பட்ட பகுதிகளில் தமிழக அரசின் மூலம் செயல் படுத்தப்படும் வளர்ச்சி பணிகள் குறித்த அறிக்கையினை தினகரன் நாளிதழில் மூன்றாண்டு சாதனை மலரில் KAL PUBLICATUONS(P) LTD , NGL என்ற நிறுவனதாரர் மூலமாக விளம்பரம் செய்தமைக்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| **வ.எண்.** | **பட்டியல் எண்/ நாள்** | **நாளிதழ் பெயர்** | **தொகை ரூ .** |
|---|---|---|---|
| 1, | 3300221042, நாள் 01/04/2020 | தினகரன் , நாகர்கோவில் | 9500/– |
| | | SGST @ 2.5% | 237.50 |
| | | CGST @2.5% | 237. 50 |
| | | **Total** | **9975.00** |
| | | | |

மேற்கண்ட விபரப்படி தொகை ரூ. **9975.00**/– ஐ M/S KAL PUBLICATIONS (P) LTD , NAGERCOIL என்ற நிறுவனதாரர்க்கு வழங்க மன்ற அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 227/2020/இ1)

அ.கு - அவசரம் அவசியம் கருதி தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>மன்றத் தீர்மானம் எண். 1634, நாள் **28.04.2020**</u>

**அனுமதிக்கப்படுகிறது.**

13) இந்நகராட்சிக்குட்ப்பட்ட பகுதிகளில் தமிழக அரசின் மூலம் செயல் படுத்தப்படும் வளர்ச்சி பணிகள் குறித்த அறிக்கையினை மாலை மலர் நாளிதழ் சார்பாக மூன்றாண்டு சாதனை மலரில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| **வ.எண்.** | **பட்டியல் எண்/ நாள்** | **நாளிதழ் பெயர்** | **தொகை ரூ .** |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| **1,** | NGL – D20030143. நாள் 13/03/2020 | MALAI MALAR , NAGERCOIL | **9200/–** |
| | | SGST @ 2.5% | **230.00** |
| | | CGST @2.5% | **230.00** |
| | | **Total** | **9660.00** |
| | | | |

மேற்கண்ட விபரப்படி தொகை ரூ. **9660 .00**/– ஐ MALAI MALAR , NAGERCOIL என்ற நிறுவனதாரர்க்கு வழங்க மன்ற அனுமதி வழங்கலாம்.
அ.கு - அவசரம் அவசியம் கருதி தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 229/2020/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1635, நாள் 28.04.2020</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

14) இந்நகராட்சிக்குட்ப்பட்ட பகுதிகளில் தமிழக அரசின் மூலம் செயல் படுத்தப்படும் வளர்ச்சி பணிகள் குறித்த அறிக்கையினை தமிழ் முரசு நாளிதழ் சார்பாக மூன்றாண்டு சாதனை மலரில் KAL PUBLICATUONS(P) LTD , NGL என்ற நிறுவனதாரர் மூலமாக விளம்பரம் செய்தமைக்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| **வ.எண்.** | **பட்டியல் எண்/ நாள்** | **நாளிதழ் பெயர்** | **தொகை ரூ .** |
|---|---|---|---|
| **1,** | 33002189201. நாள் 07/03/2020 | தமிழ் முரசு, நாகர்கோவில் . | **9500/–** |
| | | SGST @ 2.5% | **237.50** |
| | | CGST @2.5% | **237. 50** |
| | | **Total** | **9975.00** |
| | | | |

மேற்கண்ட விபரப்படி தொகை ரூ. **9975.00**/– ஐ KAL PUBLICATIONS (P) LTD , NAGERCOIL என்ற நிறுவனதாரர்க்கு வழங்க மன்ற அனுமதி வழங்கலாம்.
அ.கு - அவசரம் அவசியம் கருதி தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 331/2020/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1636, நாள் 28.04.2020</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

15)இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கோவிட்- 19 தடுப்பு நடவடிக்கையாக கிருமி நாசினி (Hypo Chloride) தெளிக்க அத்தியாவசியம் கருதி கழிவுநீர் வாகனம் எண். TN74D4151 வாகனத்தில் உள்ள பழுதுகளை அவசர அவசியம் கருதி நீக்கிட

மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவீனம் ரூ. 10500/-க்கு அனுமதிக்கும் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதியும் வேண்டப்படுகிறது.

அ.கு;- Covid-19 அவசர அவசியம் கருதி பழுது பணி மேற்கொள்ள செலவினத்தை Covid-19 ஒதுக்கீடு தொகையில் வழங்கவும் மற்றும் விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வழங்கலாம்.

(**ந.க.எண்**.544/2009/**அ**2)

**<u>மன்றத்தீர்மானம் எண். 1637, நாள் 28.04.2020</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

16)பத்மனாபபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN75Z 9748 SML வாகனத்தின் மின்கலப் பெட்டி பழுதாகி விட்டதால் மின்கலப் பெட்டி தயாரிப்பு நிறுவனமான Exide மின்கல விநியோகம் செய்யும் அங்கீகாரம் பெற்ற Jisso நிறுவனத்திடமிருந்து வாங்கவும், அதற்காகும் உத்தேச செலவு தொகை ரூ.7700/-க்கு வருவாய் நிதியிலிருந்து வழங்கவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி நிறுவனத்திற்கு தனி அலுவலர்/ ஆணையர் அவர்கள் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- உத்தேச செலவினம் ரூ.7700/-க்கும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி Exide நிறுவனத்திற்கு தனி அலுவலர் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**<u>மன்றத் தீர்மானம் எண். 1638, நாள் 28.04.2020</u>**

**அனுமதிக்கப்படுகிறது.**

**17)**இந்நகராட்சி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பது சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் கடமையாகும். உள்ளூர் மக்களுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் மக்களின் தேவைகள்அத்தியாவசிய பணிகள் போன்றவற்றை சிறந்த நிதி நிர்வாகத்தின் மூலமே செம்மையாக செயல்படுத்திட முடியும். நகராட்சியின் வரவினங்களை பொறுத்தே செலவினங்கள் அமையும். மேலும், வரவினங்களையும், வரவுகளையும் பெருக்குவதன்மூலம் உள்ளூர் மக்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்தலாம். வரவினங்களில் சொத்துவரி, குடிநீர் கட்டணம். தொழில்வரி மற்றும் குத்தகை இனங்கள் போன்றவை அடங்கும்.

பொது மக்கள் வரியினங்கள் செலுத்துவதற்கு சுமை ஏற்படாமல், நகராட்சியின் வருவாயினை பெருக்குவது சிறந்த நிதி நிர்வாகம் ஆகும். எனவே, குத்தகை இனங்களில் குத்தகை உரிமத்தின் மூலமாக நிதிஆதாரத்தினை பெருக்குவது சரியானதாகும். ஏனெனில் குத்தகை உரிமம் என்பது தேவை மற்றும் வெளிப்படை தன்மையின் காரணமாக எவருக்கும் பாதிப்பில்லாமல் வருவாயினை பெருக்கும் ஒரு சிறந்த வழியாகும். எனவே நகராட்சி நிர்வாகத்தினை செம்மையாக நடத்துவதற்கும் சிறப்பாக நிர்வாகத்தினை கொண்டு

செல்வதற்கும் குத்தகை உரிமங்களின் மூலம் சரியான, நியாயமான வருவாயினை ஈட்டும் பொருட்டு, தற்போது நகராட்சி நிர்வாகம் இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொது ஏலம் முறையினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அதன்படி ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக குத்தகை உரிம இனங்களைதற்கால சந்தை மதிப்பிற்கு இணையாக உரிமம் பெறும் பொருட்டு(வாடகை) அரசு ஆணைகளுக்கு இணங்க பொது ஏலம் விடுவது நகராட்சிக்கு லாபகரமாக அமையும். இந்நிலையில் பத்மநாபபுரம் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையம் டவுண்ஹால் கடைகள் 14/10/2019–ல் 9 ஆண்டுகள் முடிவடைந்து விட்டது.

மேலும் 2007ம் ஆண்டு அரசாணை எண். 92 நாள் 03/07/2007 வெளியிடப்பட்டது. அதற்கு பின்பு கடைகளுக்கு வாடகை அன்றைய சந்தை மதிப்பில் வாடகை மறுமதிப்பீடு செய்யப்படவில்லை. தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு மட்டும் 15%உயர்வு செய்து இன்றுவரை குத்தகைதாரர்களால் வாடகை (மாத வாடகை தொகை) செலுத்தப்பட்டு வந்தது. மேற்கண்ட அரசாணை தொடர்ந்து மூன்றாண்டு தொகுப்பு கால அளவாகக் கொண்டு மூன்றுமுறை மட்டுமே புதுப்பிக்கப்படவேண்டும். குத்தகை உரிமம் ஒன்பது ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு தற்பொழுது சந்தை மதிப்பில் வாடகை மதிப்பீடு செய்வது அல்லது பொது ஏலம் நடத்தி நியாயமான முறையில் அரசிற்கு சொந்தமான நகராட்சி கடைகளுக்கு உண்மையான மதிப்பினை பெறவேண்டியுள்ளது.

குத்தகை உரிமம் என்பது காலவரையறைக்குட்பட்டது. எனவே குத்தகையை தொடர்ந்து அனுபவிப்பது தவறாகும். மேலும் தொடர்ந்து ஒருவரே கடைகளை நடத்துவது குத்தகை விதிகளுக்கு முரண்பட்ட செயலாகும். குத்தகைதாரர் ஒன்பது ஆண்டுகள் குத்தகை உரிமம் முடிவுற்ற பின்பு கடையினை காலி செய்து விடவேண்டும், தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என குத்தகை உரிமதாரர்கள் கூறுவது சட்டத்திற்கு புறம்பானதாகும். தொடர்ந்து தனிநபரே கடையினை அனுபவித்து வருவதன்மூலம் மற்றவர்களது சமவாய்ப்பினை தட்டிப்பறிப்பதாகும். இது குடிமக்களின் அடிப்படை உரிமையினை பாதிக்கும் செயலாகும். பொதுசொத்து என்பது அனைவருக்கும் பொதுவானது. அனைரும் பங்கேற்கும் வகையில் நியாயமான வெளிப்படையான முறையில் ஏலம் நடத்தப்படவேண்டும். இதன்மூலம் சமூகப்பொருளாதார நீதி நிலை நாட்டப்படும். அரசின் வருவாயினை பெருக்க போட்டி நிறைந்த சூழ்நிலையில் பொது ஏலம் நடத்துவது சரியானதாகும் .

மேலும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியம், செலவினங்ள் அதிகமாக உள்ளதாலும், நகராட்சியில் நிதி பற்றாக்குறையின் காரணமாக நகராட்சி பணியாளர்களுக்கு மாத ஊதியம், அம்மா உணவக செலவினங்கள் குடிநீர் கட்டணம் மற்றும் மின்கட்டணம் ஆகியவற்றை செலுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. நகராட்சி வருவாயினை பெருக்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு மேற்படி காலிப்பணியிடங்களை நிரப்பிக்கொள்ள அரசாணை எண்.1/2013ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் புதிதாக ஏலம் நடத்தி சந்தை மதிப்பீட்டு தொகையில் வாடகை நிர்ணயம் செய்தால் பல மடங்கு வருவாய் கூடுதலாக கிடைக்க வாய்ப்பு உள்ளது. எனவே நகராட்சி நிதி

நிலையினை கருத்தில் கொண்டு ஏலம் நடத்தப்பட்டு 9 ஆண்டுகள் முடிவடைந்த பழைய பேருந்து நிலைய டவுண்ஹால் கடைகளுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரும் கடைகளின் விபரம்**

| வ. எண் | குத்தகை எல உரிமை விபரம் | ஏலம்/ஒப்பந்தப் புள்ளி கோரப்படும் கடைகளின் விபரம் | வைப்புத் தொகை இலட்சத்தில் ரூ. | மின்இணைப்பு வைப்பு தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 01 | பழைய பேரூந்துநிலைய டவுண்ஹால் கடைகள் | 1,2,4,5,6,7 மற்றும் 8 | 2.00 | 10000/– |

மேற்படி கடைகளுக்கு புதியதாக ஏலம் விடும் பட்சத்தில் சந்தை மதிப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்ததை விட பல மடங்கு வருவாய் கூடுதலாக கிடைக்க வாய்ப்பு உள்ளது.

பொது ஏலம் நடத்துவதால் தற்போதைய உரிமதாரர்கள் பாதிக்கப்படமாட்டார்கள். அவர்களது வாழ்வதாரம் பாதிக்கப்படும் என்பது சரியல்ல. ஏனெனில் தற்போதைய உரிமதாரரும் ஏலத்தில் பங்குபெறலாம், பொதுமக்களும் பங்குபெறலாம்.

ஏலம் கொண்டுவருவதன் மூலம் கடையை நடத்திவருபவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படும். கடைகாரர்கள் நகராட்சியின்மீது அதிருப்தி ஏற்படும் என்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்தல்ல. குத்தகை உரிமம் என்பது காலவரையரைக்கு உட்பட்டது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். உரிம காலம் முடிவுற்றபின்பு தன்னியல்பாக கடையின் உரிமம் ரத்தாகிவிடும். தாங்களாகவே கடையினை காலிசெய்துவிட வேண்டும் என்பதும் அவர்கள் நன்கு அறிவார்கள். வருவாயினை உயர்த்தும் நடவடிக்கைக்கு பொது மக்கள் மத்தியில் நகராட்சி நிர்வாகத்தின் மீது நன்மதிப்பு ஏற்படும்.

நகராட்சி சொத்து பொதுசொத்து தனிநபர்களே தொடர்ந்து 9 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து வருகிறார்கள். பொது சொத்தை அனைவரும் பயன்படுத்தும் வகையில் பொது ஏலம் நடத்துவது என்பது அனைவரும் பயன்படும் வகையில் சமவாய்ப்பு ஏற்படும். சமூகப்பொருளாதார நிதி நிலை நாட்டப்படுவதுடன், நகராட்சியின் வருவாயினை பெருக்கிட, பொதுமக்களின் அடிப்படை வசதி, அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ஏதுவாக இருக்கும். எனவே அரசாணை எண். 92 நாள் 03/07/2007–ன் படி குத்தகை ஒப்படைக்கப்பட்டு 9 ஆண்டுகள் முடிவு பெற்ற தக்கலை பழைய பேருந்து நிலைய டவுண்ஹால் கடைகள் கீழ்காணும் நிபந்தனைகளுடன் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரவும், பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்படுவதை எதிர்த்து எவரேனும் வழக்கு தொடராமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பத்மனாபபுரம் சார்பு நீதி மன்றத்தில் கோவிட் மனு தாக்கல் செய்யவும் மற்றும் வழக்கு தொடர்பான செலவீனங்களுக்கும் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவீனங்களுக்கு உத்தேசம் ரூ.5.00 இலட்சம் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1) ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்பட்ட உடன் 12 மாத வாடகையினை கூடுதல் வைப்புத் தொகையாக ரொக்கமாகவோ வங்கி வரைவோலையாகவோ நகராட்சியில் செலுத்தப்பட வேண்டும்.
2) மேற்படி குத்தகைதாரர் செலுத்தும் 12 மாத வாடகை (கூடுதல் வைப்புத் தொகை) அடுத்த ஆண்டிற்கோ அல்லது தொடர்ந்து வரும் ஆண்டுகளுக்கோ வாடகையாக கருதி ஈடு செய்யப்பட மாட்டாது.
3) வங்கி வரைவோலை ஒப்படைத்தவர்கள் மட்டும் பொது ஏலத்தில் கலந்துகொள்ளவும் நகராட்சி வாளகத்திற்குள் அனுமதிக்கப்படுவர்.
4) வங்கி வரைவோலை மூலம் செலுத்தப்பட்ட வைப்புத்தொகைகள் அனைத்தும் ஏல இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தில் உறுதி செய்யப்பட்டு கடை ஒப்படைத்த பின்னரே திருப்பி வழங்கப்படும்.
5) ஒவ்வொரு இனத்திற்கும் பொது ஏலம் முடிந்தவுடன் அந்த இனத்திற்கு வருகை புரிந்துள்ள ஏலதாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். அறிவிப்பில் பொருள் தொடர்பாகவோ அல்லது எழுத்துப் பிழைகள் இருப்பின் ஆணையரின் கருத்தே இறுதியாகும்.
6) குத்தகை உரிம இனம் ஏலம் விடப்படும் ஒப்பந்தப்புள்ளி வழங்குவோர் மாத உரிமத்தொகை விபரத்தினை எழுத்துமூலம் எழுதி தனி கவரில் ஒட்டி சீல்வைத்து அதற்கென வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் தேதியன்று முற்பகல் 11.00 மணிக்குள் போடப்பட வேண்டும். அன்றைய தினமே முற்பகல் 11.30 மணிக்கு ஏலம் நடத்தப்படும். அதிக பட்சமாக ஏலம் அல்லது ஒப்பந்தப்புள்ளி கோரியவருக்கு நகர் மன்ற அனுமதி பெற்று உரிமம் வழங்கப்படும்.
7) ஏலம் ஊர்ஜிதம் செய்த பின்னர் ஏலதாரர் ரூ.100/–க்கான முத்திரைத் தாளில் ஒப்பந்தம் எழுதி (Notary Public) வழங்கப்பட வேண்டும்.
8) 1994– ம் வருடத்திய நினதிச்சட்டம் S.L.NO.90(a) செக்சன் 65 ன் படி குத்தகை தொகையில் மத்தியகலால் மற்றும் சுங்கத்துறையினர் அவ்வப்போது விதிக்கும் சரக்கு மற்றும் சேவைவரி (GST) 18% செலுத்தப்பட வேண்டும்.
9) ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் நகராட்சிக்கு எவ்விதமான வாடகை பாக்கியும், வரி பாக்கியும் நிலுவை வைத்திருக்கக் கூடாது. ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் நகராட்சி மீது எவ்வித வழக்குகளும் தொடர்ந்தவர்களாக இருக்ககூடாது.
10) மறு ஏலம்கோருவோர் உச்ச ஏலக்கேள்வி தொகையுடன் 10% தொகையினை கூடுதலாக ஏலம் நடைபெற்ற 24 மணி நேரத்திற்குள் நகராட்சி கருவூலகத்திலோ அல்லது வரைவோலையாகவோ செலுத்தி மறு ஏலம் கோரலாம்.
11) குத்தகை உரிம ஏல இனங்களை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ ஏலம் நடத்தும் அதிகாரிக்கு உரிமையுண்டு.
12) குத்தகை உரிம ஏல இனங்களை அலுவல் காரணமாக ஒத்திவைக்க ஆணையருக்கு உரிமையுண்டு
13) ஏல உரிம காலம் முடிந்ததும் கடடிடத்திற்கோ இதர உபகரணங்களுக்கோ எவ்வித சேதாரமின்றி திரும்ப ஒப்படைக்க வேண்டும்.
14) நகர்மன்றத்தின் முடிவே இறுதியானது
15) நகராட்சி கடைகள் ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை உரிமம் ஒப்படைக்கப்படும். மூன்று ஆண்டுகளை கொண்ட ஒரு தொகுப்பு கால அளவு

முடிவடைவதன் பேரில் உரிமதாரர்கள் சொந்த விருப்பத்தின் பேரில் கடை அனுபவ உரிமை வாடகையில் **15 %** உயர்வு செய்து புதுப்பிக்கப்படும். இவ்வாறு ஒன்பது ஆண்டுகள் புதுப்பிக்கப்பட்டு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை குத்தகை தொகை **15%** உயர்த்தப்படும். மேலும் புதுப்பிப்பதற்கான அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதங்களின் கட்டணம் செலுத்தி விண்ணப்பித்துக்கொள்ள வேண்டும்.

16) ஏலம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும் பட்சத்தில் வழக்கின் முடிவை பொறுத்து ஏலம் இறுதி செய்யப்படும்.

17) ஏலம் நடைபெறும் பொழுது கருத்து வேறுபாடு, முரண்பாடுகள் ஏற்படின் ஆணையாளரின் முடிவே இறுதியானது. ஏலத் தேதியை மாற்றம் செய்யவும் ஒத்திப்போடவும் ஆணையருக்கு அதிகாரம் உண்டு.

18) 2018-2019 முதல் 2020-2021 மற்றும் **2020–2021** முதல் **2022–2023** வரையுள்ள பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் அனைத்தும் இதற்கும் பொருந்தும்.

19) மேலும் அரசால் விதிக்கப்படும் சரக்கு மற்றும் சேவைவரி (GST) மாறுதல் செய்யப்பட்டால் அதன் படியும் செலுத்தப்பட வேண்டும்.

20) ஏலம்/ஒப்பந்தப்புள்ளிக்கு வைப்பு தொகை செலுத்தியவர்கள் மட்டுமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

21) வைப்பு தொகை செலுத்தியவர்கள் கலந்து கொள்ள இயலாத நிலை ஏற்பட்டால் ரூ.**100/–** மதிப்புள்ள முத்திரைத்தாளில் உரிய அத்தாட்சி பெற்று நோட்டறி வழக்கறிஞர் கையொப்பம் பெற்று ஏலம்/ஒப்பந்தப்புள்ளி நடைபெறும் முன்னர் அலுவலகத்தில் ஒப்படைத்து உரிய அனுமதி பெற்றால் மட்டுமே ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

22) ஏலம்/ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்பட்ட உடன் ஒரு ஆண்டுக்கான கடை வாடகை கூடுதல் வைப்பு தொகையாக செலுத்தப்பட வேண்டும். தவறினால் தங்கள் வைப்பு தொகை பறி முதல் செய்யப்படும்.

23) ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோருபவர்கள் சரக்கு மற்றும் சேவைவரி தவிர்த்து ஒரு மாத வாடகை எவ்வளவு என குறிப்பிடப்பட வேண்டும்.

24) கடை உறுதி செய்யப்பட்டால் வாடகை செலுத்தும் பொழுது சரக்கு மற்றும் சேவைவரி சேர்த்து செலுத்தப்பட வேண்டும்.

25) கடை வாடகை பிரதி மாதம் **5–**ம் தேதிக்குள் செலுத்தப்பட வேண்டும்.

அலுவலக குறிப்பு :–

1) தற்சமயம் பொது ஏலம் விடும் பட்சத்தில் அதிக வருவாய் பெற வாய்ப்பு உள்ளது. மேலும் பொதுமக்கள் அனைவரும் பங்கேற்க சமவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

2) ஒருவரே தொடர்ந்து **9** ஆண்டுகளுக்கு மேலாக கடையை நடத்திக்கொண்டு வருவதால் மற்றவர்களின் நியாயமான வாய்ப்பு பறிக்கப்படுகிறது. தொடர்ந்து குத்தகை உரிமத்தை புதுப்பிக்கும் முறையில் நகராட்சிக்கு பெரும் நிதியிழப்பு ஏற்படுவதும் தடுக்கப்படுகிறது

3) மேற்படி ஏலம் நடக்காவிடில் நிதியிழப்பு ஏற்படும். இதனால் நகராட்சியில் வளர்ச்சி பணிகள் பாதிக்கப்படும். எனவே பொது ஏலத்தினை ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் மூலமும் நடத்திடலாம்.

4) ஏலம்/ஒப்பந்தப்புள்ளி செய்தித்தாள் விளம்பரம் செய்யவும், நீதி மன்ற வழக்கு சம்மந்தமாக செலவுகள் மற்றும் இதர செலவினங்களுக்கும் ரூ.**5.00** லட்சம் பொது

நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளலாம்.
(ந.க.எண். 358/2020/அ1)

**மன்றத் தீர்மானம் எண். 1639, நாள் 28.04.2020**

**அனுமதிக்கப்படுகிறது.**

ஒப்பம்/-
தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.